IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 03/2009

Deposition of Witness : DW 2

Name : துளசிராமன் (வயது – 69)

Father's Name /W/o : த/பெ நரசிம்மநாயக்கர்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : கணபதிபுரம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 29.10.2025.

## குறுக்கு விசாரணை

1. சர்வே எண்.116/1 இல் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 2 ஏக்கர் 76 செண்ட். மேற்படி 2 ஏக்கர் 76 செண்டில் தான் நான் 38 செண்ட் நிலத்தை வாங்கியுள்ளதாக என் பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள இடம் நடராஜபிள்ளை மற்றும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.116/1 இல் அருணாச்சலம் மற்றும் நடராஜபிள்ளையின் வாரிசுகள் வள்ளியம்மாளுக்கு 2 கிரையப் பத்திரம் முன்னிலைக்கு 1.61 ஏக்கர் விற்றார்கள் என்றால் வாங்கியிருப்பார்கள் எனக்கு தெரியாது.

2. நான் 38 செண்ட்க்கு மட்டும் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வள்ளியம்மாள் வாங்கியது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதனால் வள்ளியம்மாள் சொத்து குறித்து நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய 38 செண்ட் குறித்து சிட்டா, பட்டா, அடங்கல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. மேற்படி நான் ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளேன் என்று தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என் பெயரில் உள்ள சிட்டா, பட்டா, அடங்கல் பார்த்தால் என் அனுபவத்தில் எவ்வளவு செண்ட் உள்ளது என்று தெரியவரும் என்றால் சரிதான். என் பெயருக்கு வாச்சா கிரையம் வந்தது என்றும் யு.டி.ஆர் பட்டா வழங்கப்பட்டது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல என் பெயரில் கிரைய பத்திரம் மற்றும் யு.டி.ஆர் பட்டா 38 செண்ட்க்கு உள்ளது. வாதிகள் வள்ளியம்மாளுக்கு விற்றது போக அவர்கள் அனுபவத்தில் உள்ள இடத்திற்கு நான் எவ்வித உரிமையும் கோரவில்லை என்றால் சரிதான். தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.